## வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 454/2025
## வழக்கு சாட்சி PW–2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இமானுவேல்ஜெயசிங் ராஜா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஞானஇரத்தினம் | தொழில் | : | தலைமைகாவலர் |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 08.05.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஊத்துமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது, 24.04.2020ம் தேதி, மதியம் 15.00 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் பாக்கியராஜ், காவலர்கள் சரவணன் மற்றும் சுரேஷ் ஆகியோர் கொரோனா தொற்று சம்மந்தமாக விதிமுறை மீறல் நடவாமல் தடுக்க ரோந்து செய்து கண்காணித்து வரும்போது தங்கம்மாள்புரம் ஊருக்கு தென்புறம் உள்ள 1வது எதிரி காளிமுத்து என்பவரது தோட்டத்தில் பின்னால் விசாரித்து தெரிந்த தெற்கு பனவடலிசத்திரத்தை சேர்ந்த காளிமுத்து மற்றும் அதே ஊரை சேர்ந்த காளிமுத்து, முருகன், தங்கராஜ், தங்கமுத்து மற்றும் பாண்டியராஜ் ஆகிய ஆஜர் எதிரிகள் சாராயம் வடிக்க லாயக்கான உபகரணம் வைத்து 3வது எதிரி முருகன் மற்றும் 4ம் எதிரி தங்கராஜ் ஆகிய இருவரும் மேல் பானையில் தண்ணீர் மாற்றிக்கொண்டும், 5ம் எதிரி தங்கமுத்து என்பவர் தீயை

தள்ளிக்கொண்டும், 6 ம் எதிரி பாண்டியராஜ் என்பவர் டியூப் வழியாக வடிந்த சாராயத்தை பிளாஸ்டிக் கேனில் பிடித்துக்கொண்டும் இருந்தவர்கள் போலீசு பார்டியாகிய எங்களை கண்டதும் ஓடி எழுந்தவர்களை போலீசு பார்டி மடக்கி பிடித்து சம்பவயிடத்தை வந்து பார்வையிட சுமார் 35 லிட்டர் பிடிக்ககூடிய 3 வெள்ளை நிற கேன்களில் சாராயம் நெடியுடன் கூடிய சாராயமும், அதில் ஊமத்தங்காய் விதையும் மிதந்து கொண்டிருந்தது. மேற்படி எதிரிகளிடம் சாராயம் பற்றி விசாரிக்க அதிக போதைக்காக நச்சு தன்மைக்கொண்ட ஊமத்தங்காயை இடித்து போட்டிருப்பதாக தெரிவித்தார்கள். பின்பு மேற்படி கேன்களில் இருந்து தலா 750 மிலி லிட்டர் பிடிக்க கூடிய வெள்ளை நிற பாட்டிலில் தலா 500 மிலி மாதிரிக்கு எடுத்தும் கொதி உலையில் இருந்து இரு வெள்ளை நிற பாட்டிலில் தலா 500 மிலி மாதிரிக்கு எடுத்து SHO சீல் வைத்தார். சாராயம் வடிக்க பயன்படுத்திய மண்பானைகள் மற்றும் மீதமுள்ள சாராயத்துடன் கூடிய கேன்களை கொண்டு செல்ல போதிய வசதி இல்லாததால் அதே இடத்தில் கொட்டி அழித்து அழிமதி செய்தும், பின்பு மேற்படி பாட்டில்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியும், மேற்படி சம்பவயிடத்தையும் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலிசு பார்டியாகிய நாங்களே கையொப்பம் செய்து கைப்பற்றி எதிரிகள் மற்றும் சொத்துகள் சகிதம் நிலையம் 17.45 மணிக்கு வந்து மேற்படி எதிரிகள் மீது நிலைய குற்ற எண். 180/2020, சட்டப்பிரிவுகள் 4(1) (b), 4(1A), 4(1)(aaa) TNP Act–ன் படி வழக்கு பதிவு செய்ய நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எந்த வாகனத்தில் சம்பவயிடத்திற்கு சென்றோம் என்றால் ஆய்வாளர் வாகனத்தில் சென்றோம். 5 பேரும் காவல் ஆய்வாளர் வாகனத்தில் தான் சென்றோம். என் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை. ஆய்வாளர் மற்றும் ஒரு போலீஸ் எதிரிகளை ஆய்வாளர் வாகனத்தில் அழைத்து சென்றார்கள். நாங்கள் பின்னால் ஒரு ஆட்டோ பிடித்து வந்தோம். சம்பவயிடத்தில் 1 1/2 மணி நேரம் நின்றிருப்போம். மண்பாணை மற்றும் இதர பொருட்களை எதனால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் வாடை வந்ததனால் அழித்துவிட்டோம். சம்பவம் நடக்காததனால்தான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி சம்பவயிடத்தில் வைத்து தட்டச்சு செய்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன முறையில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், அத்தாட்சி மூலம் எவ்வித சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் பின் யோசனையோடு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.26 13:00:34 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 454/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW–1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சாமுவேல் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | தூத்துகுடி | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 08.05.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தூத்துக்குடியில் குடியிருந்து வருகிறேன். தூத்துகுடி காவல் பயிற்சி பள்ளியில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஊத்துமலை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 24.04.2020 ம் தேதி, மதியம் 15.00 மணிக்கு நானும், தலைமை காவலர் இமானுவேல் தேசிங்ராஜா மற்றும் காவலர்கள் சரவணன் மற்றும் சுரேஷ் ஆகியோர் ஆய்வாளர் தனலட்சுமிக்கு அவருக்கு உதவியாக கொரோனா தொற்று சம்மந்தமாக விதிமுறை மீறல் நடவாமல் தடுக்க ரோந்து செய்து கண்காணித்து வரும்போது தங்கம்மாள்புரம் ஊருக்கு தென்புறம் உள்ள 1வது எதிரி காளிமுத்து என்பவரது தோட்டத்தில் பின்னால் விசாரித்து தெரிந்த தெற்கு பனவடலிசத்திரத்தை சேர்ந்த ராமையாத்தேவர் மகன் காளிமுத்து மற்றும் அதே ஊரை சேர்ந்த மாரிமுத்து என்பவரது மகன் காளிமுத்து, வேலுச்சாமி தேவர் மகன் முருகன், முத்தையா தேவர் மகன் தங்கராஜ், சண்முகையாத்தேவர்மகன் தங்கமுத்து, மற்றும் வெள்ளத்துரை மகன் பாண்டியராஜ் ஆகிய ஆஜர் எதிரிகள் சாராயம்

வடிக்க லாயக்கான உபகரணம் வைத்து 3வது எதிரி முருகன் மற்றும் 4ம் எதிரி தங்கராஜ் ஆகிய இருவரும் மேல் பானையில் தண்ணீர் மாற்றிக்கொண்டும், 5ம் எதிரி தங்கமுத்து என்பவர் தீயை தள்ளிக்கொண்டும், 6ம் எதிரி பாண்டியராஜ் என்பவர் டியூப் வழியாக வடிந்த சாராயத்தை பிளாஸ்டிக் கேனில் பிடித்துக்கொண்டும் இருந்தவர்கள் போலீசு பார்டியாகிய எங்களை கண்டதும் ஓடி எழுந்தவர்களை போலீசு பார்டி மடக்கி பிடித்து சம்பவயிடத்தை வந்து பார்வையிட சுமார் 35 லிட்டர் பிடிக்ககூடிய 3 வெள்ளை நிற கேன்களில் சாராயம் நெடியுடன் கூடிய சாராயமும்,அதில் ஊமத்தங்காய் விதையும் மிதந்து கொண்டிருந்தது. மேற்படி எதிரிகளிடம் சாராயம் பற்றி விசாரிக்க அதிக போதைக்காக நச்சு தன்மைக்கொண்ட ஊமத்தங்காயை இடித்து போட்டிருப்பதாக தெரிவித்தார்கள். பின்பு மேற்படி கேன்களில் இருந்து தலா 750 மிலி லிட்டர் பிடிக்க கூடிய வெள்ளை நிற பாட்டிலில் தலா 500 மிலி மாதிரிக்கு எடுத்தும் கொதி உலையில் இருந்து இரு வெள்ளை நிற பாட்டிலில் தலா 500 மிலி மாதிரிக்கு எடுத்தும் சாராயம் வடிக்க பயன்படுத்திய மண்பானைகள் மற்றும் மீதமுள்ள சாராயத்துடன் கூடிய கேன்களை கொண்டு செல்ல போதிய வசதி இல்லாததால் அதே இடத்தில் கொட்டி அழித்து அழிமதி செய்தும், பின்பு மேற்படி பாட்டில்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியும், மேற்படி சம்பவயிடத்தையும் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலிசு பார்டியாகிய நாங்களே கையொப்பம் செய்து கைப்பற்றி எதிரிகள் மற்றும் சொத்துகள் சகிதம் நிலையம் 17.45 மணிக்கு வந்து மேற்படி எதிரிகள் மீது நிலைய குற்ற எண். 180/2020, சட்டப்பிரிவுகள் 4(1) (b), 4(1A), 4(1)(aaa) TNP Act–ன் படி வழக்கு பதிவு செய்ய நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து

என்னுடையதுதான். அந்த அத்தாட்சி **அசாஆ.1** ஆகும். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எந்த வாகனத்தில் சம்பவயிடத்திற்கு சென்றோம் என்றால் ஆய்வாளர் வாகனத்தில் சென்றோம். காவல் ஆய்வாளர் பயன்படுத்தும் வாகனத்தில் 5 பேர் மட்டும்தான் பயணிக்க அனுமதி உள்ளது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்து ஆய்வாளர் வாகனத்தில் அழைத்து வந்தோம் என்றால் சரியல்ல. ஆய்வாளர் மற்றும் ஒரு போலீஸ் எதிரிகளை ஆய்வாளர் வாகனத்தில் அழைத்து சென்றார்கள். நாங்கள் பின்னால் வேறு வாகனத்தில் சென்றோம். என்னுடைய ஆய்வாளர் விசாரணையில் தனிதனியா வாகனத்தில் சென்றதாக கூறவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் 1 மணி நேரம் நின்றிருப்போம். மதுவிலக்கு சட்டப்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல. அத்தாட்சி சம்பவயிடத்தில் வைத்து தட்டச்சு செய்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. 35 லிட்டர் கேன் (3 எண்ணிக்கை) என்ன காரணத்தினால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அழித்தல் மகஜர் தனியாக தயார் செய்யவில்லை. கொரோனா காலத்தில் புள்ளியல் கணக்கிற்காக வேண்டி மேல் அதிகாரிகளின் உத்தரவிற்கு இணங்க பொய் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் வைத்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை.

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன முறையில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், அத்தாட்சி மூலம் எவ்வித சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள்

மற்றும் சான்று பொருட்கள் பின் யோசனையோடு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.26 13:00:44 +0530